# Bharathanatya Arangetram

## Miss Sahana Sivakumar
## Miss Sabna Sivakumar



Disciple of Mrs Yalini P. Balendren
(Ba, Ma in Bharathanatyam)

Musikteatret Holstebro
11-12-2010

# *Shisya Message*

O Lord Natarajah! O Lord Ganesha! We call upon you. Hear our prayers and enlighten our souls with strength and courage on this auspicious day.

We would like to start by thanking our parents without them tonight would not have been possible. Both have put so much effort, time and commitment towards this Arangetram. No words can express how grateful we are to have mum and dad in our lives. We are so privileged to be their daughters and we hope to make them proud tonight. There are no words to summon up what any parents would do for their children; it is just amazing how much they have sacrificed for us.

Planning such a big evening is nowhere near simple; it takes up a great amount of strength. Mum and dad have managed to do all this without any expectations or complaints and they are the sole reasons for us having learnt this art form, which they admires and respects.

Our Guru, smt. Yalini P. Balendren has been a bright role model for us. We know her as a person with discipline, distinction, devotion, dignity and decision.

## *About Our Guru*

*Smt. Yalini P. Balendren* (specialist in Pediatric Nursing):

1996 : The first performer of Bharathanatya Arangetram in Denmark.

1999 : Yalini founded "Narthanalayaa" with the intention of committing herself to the propagation of the classical arts.

2001 : Under the guidance of the distinguished exponent of Bharathanatyam, Padma shri Chitra Visweswaran, Yalini received bharathanatya teaching certificate. Awarded the title "Nithya Bharatha Yothi" by Pitchumani Iyar and natya visaradha R. Padma (Naratha Gnana saba in India)

2006 : Enrolled as a student at Faculty of Arts, Bharathidasan University at Thiruchirappalli, India

2009 : Finished BA degree in Bharathanatyam.

2010 : MA final year.









We have now been her disciples for about 12 years; her tutelage has brought us this far and has made this art a part of who we are.  We are proud to be her students, and we are sure that she will be proud of us tonight. She is not only our guru but also a good friend who brings enjoyment and laughter when times get though. We had so much fun during our dance practise for our Arangetram, though it was a really heavy time. Her style and approach is with such grace, perfection and emotion.

We want to say thank you to you, and had taken this journey with us. Our time together with you will never bee forgotten, and we hope there will come more eventful experience for our memories.

*Sahana*
&
*Sabna*





# குருவின் ஆசியுரை...

ஆடற்கலை அரசன் தில்லை நடராஜன் பெருமானின் பொற்பாதம் பணிந்து பரதமுனிவர் தனது சீடர்களுக்கு பரதக்கலையை கற்றுக்கொடுத்து சிவனின்முன் திருத்தம் திருத்தியும் நாட்டியம் என்பவற்றை அரங்கேற்றினார். இதை கண்டு மகிழ்ந்த சிவன் தாண்டவத்தையும் லாஸ்யத்தையும் பரதமுனிவருக்கு அருளினார். இவ்வாறு இறைவனால் அருளப்பட்ட தெய்வீக கலையே பரதக்கலை.

இவ்வரிய தெய்வீகக்கலையை இன்று ஆடல் வல்லானின் திருப்பாதங்களில் புஷ்பங்களாக அர்ப்பணிக்கும் செல்வங்கள் சகானா, சப்னா அவர்கள் நித்திய சதங்கை நர்த்தனாலயாவின் இரண்டாவது அரங்கேற்றம் காணும் மாணவிகள்.

செல்விகள் சிறுவயதில் இருந்து என்னிடம் பரதக்கலையை முறைப்படி கற்று வருகின்றனர். இவர்களின் ஆர்வமும் தாய் தந்தையினரது விடாமுயற்சியுமே இன்று இவர்கள் அரங்கேற்றம் அளவிற்கு உயர்த்தி உள்ளது. இவர்கள் டென்மார்க்கில் பல மேடைகளில் எழுச்சி நடனங்கள், நாட்டிய நாடகங்கள், குழுநடனங்கள் என்பவற்றில் பங்கு பெற்று சிறப்பாக நடனமாடி பலரின் பாராட்டை பெற்றவர்கள்.

அத்துடன் OEBL இல் தரம் 6 வரைக்கும் திறமாக சித்தி அடைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. செல்விகள் கலையில் மட்டுமின்றி தங்களது கல்வியிலும் ஆக்கமும் ஊக்கமும் உடையவர்கள் ஆவார். இவர்களின் நடன அரங்கேற்றம் சிறப்பாகவும் மேலும் அவர்களின் கலைப்பணியால் பரதக்கலை மெருகு பெற ஆடல் வல்லானின் அருள்வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

"புரதானக்கலையாம் நடனக்கலையை தரம்
குறையாமல் பேணிக்காப்பது நமது கடமை"

ஆசிரியை **ஸ்ரீமதி யாழினி பா பாலேந்திரேன்**
(Specialist in Pediatric Nursing)



Rev. Msgr. S.M. George,
The Director,
Off-campus Degree Programme,
Kalai Kaviri College of Fine Arts,
18, Benwells Road, Tiruchirappalli - 620 001.



Dear Mrs. Yalini P. Balendren,
Prayerful Greetings!
On behalf of Kalai Kaviri College of Fine Arts I send my best wishes and prayers for sahana and sabna sivakumar on the occaction of their arangetram at Nitya Sathangai Narthanalaya. I wish the function grand success and may god bless all your endeavours in Bharathanatyam.

*David Sydney Basil*
Co-ordinator
Kalai Kaviri.



Oriental Examination Board London

**Oriental Examination Board London (OEBL)**
**International Fine Arts**
**Mrs. Ambika Thamotheram** (Director)
108, Byron Road,
North Wembley, Middx, HA0 3PE, UK, Tel/Fax: 020 8904 1539



It gives me great pleasure to send this message of greeting to Sahana and Sabna Sivakumar on the occation of their Bharatanatya Arangetram on the 11th Dec 2010, in Denmark.

The two sisters Sahana and Sabna have both completed Grade 6 in Bharatanatyam Exams conducted by Oriental Examination Board London. They are both very talented students of Yalini P Balendren

Yalini is a very dedicated and hard working teacher. Her students sit for the Bhartanatyam exams conducted by our Board every year and do very well.

Yalini completed her BA in Bharatanatyam and is at present preparing for her MA Degree at the Bharathithasan University India. She runs her own school "Nitya Sathangai Narthanalayam, Denmark" where she trains many students.

I wish Sahana, Sabna and their Guru Yalini ,all the best for a very successful Arangetram

With my blessings

*Ambika Thamotheram*
Director (OEBL)

## Natuvangam



### Smt. Yalini P. Balendren

(BA-Bharathidasan University)
(Specialist in Pediatric Nursing)

ஸ்ரீமதி யாழினி பா பாலேந்திரன் பரத நாட்டிய ஆரம்பக் கல்வியை யாழ் சதங்கை நர்த்தனாலய ஆசிரியை நடனக்கலாஜோதி லீலா நாராயணன் அவர்களிடம் பயின்றார். பின்னர் திருமதி மாலா சத்திய மூர்த்தியிடம் இக்கலையைக் கற்று டென்மார்க்கில் முதல் மாணவியாக அரங்கேற்றம் செய்து கொண்டவர் என்ற பெருமையும் பெற்றவர். அத்துடன் ஈழத்தமிழர் கலையரங்கத்தினர் 1996ஆம் ஆண்டிற்கான சிறந்த கலைஞர் விருதினை வழங்கிக் கௌரவித்தனர். 1998ஆம் ஆண்டு இந்தியாவில் நட்டுவாங்கம் உட்பட பல உருப்படிகளையும் (குச்சுபுடி, மோகினி ஆட்டம், பொம்மை நடனம்) பயின்று சென்னை நாரதகான சபாவில் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றினை நடத்தினார். இந்நிகழ்வில் “நித்திய பரதஜோதி” என்ற சிறப்பு பட்டத்தினை வீணை வித்துவான் பிச்சுமணி ஐயர் முன்னிலையில் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் நிருத்திய சூடாமணி கலைமாமணி பத்மஸ்ரீ சித்ரா விஸ்வேஸ்வரனிடம் பரதக்கலையை தொடர்ந்து கற்றுக்கொடுப்பதற்கான சான்றிதழையும் பெற்றார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் வளாகம் கடந்த நுண்கலைக்கான இளமானி பட்டப்படிப்பை 2006 முதல் கற்றுக்கொண்டு சிறப்பாக தேர்ச்சி பெற்று 2009 முதல் முதுமானி பட்டப்டிப்பை அதே பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு 2011இல் இறுதி ஆண்டிற்கான பரீட்சைக்கு தேற்றுகிறார்.

## Accompanying Artists




**Vocal**
Smt. Kumuthini Prithviraj
(MA - Madras University)



**Miruthangam**
R.R. Prathap



**Violin**
Dr. Jyotsna Srikanth



**Kadam**
R.N. Prakash



**Thampura**
Mehavi Pathmasekaran

## Repetoire

**Pushpanjali and Alarippu**
Ragam : Gambiranaddai — Thalam : Aathi
Ragam : Naddai — Thalam : Kanda Egam

**Jathiswaram**
Ragam : Hindolam — Thalam : Aathi

**Nadesa Kavuthuvam**
Ragam : Hamsathvani — Thalam : Chathusta Egam

**Varnam**
Ragam : Naddai Kurunchi — Thalam : Aathi

INTERMISSION

**Keerthanam**
Ragam : Revathi — Thalam : Aathi

**Patham**
Ragam : Huseini — Thalam : Rupagam

**Kavadichenthu**
Ragam : Kavadichenthu — Thalam : Aathi (Kanda Naagi)

**Thasavatharam**
Ragam : Ragamalika — Thalam : Aathi

**Thillana**
Ragam : Mohanakalyani — Thalam : Aathi

MANGALAM

# வாழ்த்து

மிகவும் தொன்மை வாய்ந்ததும், பரதமுனிவரால் உருவாக்கப்பட்டதுமான பரதக்கலையானது இன்று உலகின் பல பாகங்களிலும் அனைத்து மதத்தினர் மத்தியிலும் மிகவும் பிரபலமிக்க ஒரு நாட்டியக்கலையாக விளங்குகிறது. ஆனாலும் சைவசமயத்தவர்களின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே இந்த நடனத்தை ஆடியதாகச் சித்தரிக்கப்படுவது சைவ சமயத்தவர்கள் இந்த நாட்டியக்கலையை ஒரு தெய்வீகக்கலையாக கருதுவதை எடுத்துக்காட்டுகின்றது. சிவபெருமான் உயிர்கள் மீது கொண்ட அன்பினால் மகிழ்ச்சியுடன் அவர் ஆடும் நடனம் "ஆனந்த தாண்டவம்" என்றும், அழிக்கும் கடவுளாக அவர் ஆடுகின்ற நடனம் "ருத்ர தாண்டவம்" என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு நடனத்துக்கே ராஜனாகிய நடராஜரின் (சிவபெருமானின்) புதல்வர் பெயரைக் கொண்டுள்ள சிவகுமாரனின் புதல்விகளான செல்விகள் சகானாவும், சப்னாவும் அரங்கேற்றம் காணும் இவ்வேளையில், அவர்கள் இந்த தெய்வீகக்கலையில் மென்மேலும் தேர்ச்சிபெற்று பரதக்கலைக்குப் புகழ்சேர்க்கவேண்டுமென்று வாழ்த்திக்கொண்டு அவர்தம் ஆசிரியை திருமதி. யாழினி பாலேந்திரன் அவர்களும் இதுபோன்று எண்ணற்ற கலைஞர்களை உருவாக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் திருப்பாதங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**பேரி. சொக்கலிங்கம்**
ஆய்வாளர் : சைவ கிரியைநெறி



பாவம், ராகம், தாளம் எனும் மூன்றும் ஒருங்கே அமைந்து, ஐம்புலங்களையும் மகிழ்விக்க வல்லதுமான, பாரம்பரிய கலைகளில் ஒன்றான பரதக்கலையை சிறப்பாக பயின்று இன்று அரங்கேற்றம் காணும் செல்விகள் சகானா சிவகுமார் மற்றும் சப்னா சிவகுமார் ஆகிய சகோதரிகள் இருவருக்கும் திசைகள் இளையோர் அமைப்பின் சார்பாக எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். அத்தோடு மென்மேலும் வளர்ச்சி அடைந்து பெற்றவர்க்கும் தாய்நாட்டிற்கும் பெருமை சேர்த்திட வேண்டுமென அன்போடு வேண்டுகின்றோம்.



எமது குடும்பத்தின் மூத்த பேத்திகளான சகானா சப்னா அரங்கேற்றம் காண இருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். இவர்கள் இருவரும் புலம்பெயர் நாட்டில் பிறந்து வளர்ந்து இருந்தாலும் இக்கலையை சிறுவயதில் இருந்தே ஆரம்பித்து இன்று அரங்கேற்றம் காணுகின்றார்கள் என்பதை கேட்கும் போது மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். இவர்கள் இக்கலையை மேன்மேலும் கற்று இக்கலையுலகில் வளரவும், இக்கலையில் முழுமைபெற்று எமது நாட்டிற்கும், எமது சமுகத்திற்கும் பல சேவைகள் ஆற்றி பேரும் புகழுடன் வாழவும் நல் ஆரோக்கியத்துடனும் சீர் சிறப்புடன் முன்னேறவும் எமது நல்வாழ்த்துக்கள்.



இங்ஙனம்

**அப்பப்பா, அப்பம்மா**
**(கணபதிபிள்ளை, ஆனந்தமலர்)**





அன்புச்செல்ல பேத்திகள் சகானா, சப்னாவின் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு எமது இனிய இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள். பாவம், ராகம், தாளம் சேர்ந்த பரதகலை நம் பரதநாட்டின் பொக்கிஷம் அப்படிப்பட்ட அற்புதமான கலையை மிகுந்த சிரத்தையுடனும், ஆர்வத்துடனும் கற்றுத்தேர்ந்த குமாரிகள் சகானா, சப்னா அரங்கேற்றம் செய்ய இருப்பது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகின்றது. இவர்கள் கலைத்துறையில் வெற்றியடைய எமது குடும்பத்தின் நல்வாழ்த்துக்கள். இவர்களுக்கு ஆரோக்கியமும், ஐஸ்வர்யமும் வெற்றிகளும் அளித்திட இறைவனை பிராத்திக்கின்றோம்.

இங்ஙனம்

**தாத்தா, அம்மம்மா**
**(சுபேந்திரநாதன், செல்வறதி)**

## வாழ்த்துச் செய்தி



கலைகளினால் எங்கள் வாழ்வு அர்த்தம் பெறுகின்றது. இத்தெய்வீகக் கலையான பரதக்கலையை செல்விகள் சகானா, சப்னா சிவகுமார் இருவரும் சிறுவயதில் இருந்தே தமது குருவிடமிருந்து முறைப்படி கற்று வருகின்றனர். இவர்கள் பல நடன நிகழ்வுகளில் பங்கு பற்றி பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றிருக்கின்றார்கள். இவர்களுடைய அரங்கேற்றம் மிகச்சிறப்புற அமைய கூத்தனை வேண்டி எமது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குகின்றோம்.

**டெனிஷ் தமிழ் தோழமை ஒன்றியம்,**
ஸ்கேயன் நிர்வாகிகள்.

## SKJERN மாலதி தமிழ்க்கலைக்கூடத்தின் வாழ்த்து

தமிழ்மொழியை கற்றுக்கொடுப்பதுடன் நின்றுவிடாமல் கலை, கலாச்சார, பண்பாடுகளை ஒட்டிய கலைப்பாடங்களை வழங்கிவரும் SKJERN மாலதி தமிழ்க்கலைக் கூடத்தின் மாணவிகள் சகானா சிவகுமார், சப்னா சிவகுமார் இருவருக்கும் எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள். மாறுபட்ட கலாச்சாரத்தில் இப்படியான நிகழ்வுகளை நடாத்தும் பெற்றோர், ஆசிரியர் வரவேற்கத்தக்கவர்கள். கடந்த காலங்களில் உங்கள் இருவரின் நடன நிகழ்ச்சிகள் எமது மாலதி தமிழ்க்கலைக்கூடத்திற்கு பெருமையையும், பாராட்டையும் பெற்றுத்தந்தது குறிப்பாக “வன்னி மண்ணிலே மயில் கூத்தாடுமா இல்லை போராடுமா” என்ற பாடலுக்கு வழங்கிய அபிநயம் பார்வையாளர்களின் உள்ளத்தில் தாயக சிந்தனையையும் மனித நேயத்தையும் மலரவைத்தது.



நடன ஆசிரியை “நித்திய பரதஜோதி” யாழினி பாலேந்திரனுக்கு எமது பாராட்டுக்களும் நன்றியும் உரித்தாகட்டும். அரங்கேற்றத்துடன் நின்றுவிடாமல் மேன்மேலும் இக்கலையை பயின்று பரதக்கலையின் மங்காத நட்சத்திரங்களாக நின்று! நிலைத்து! சுடர் வீசிப் புகழ்காண மாலதி தமிழ்க்கலைக்கூடத்தின் மனமார வாழ்த்துக்கள்.

இவ்வண்ணம்
**SKJERN மாலதி கலை கூடம்**

*Dear Sahana*

Congratulations with your Arangetram.

You and I have been friends since you were 7 years old. It has been incredibly nice to follow you since your childhood, and very exciting to see how you and your family have been combining Danish and Tamil. As a very well integrated into Danish society you on the other hand, managed to keep the good Tamil values which has been an important component for you. This has provided a basis for part of your way to see life. What you have reached now, did not just come all by itself. You are hard working and diligent girl.

I wish you all the best with dance and with your education and your life in general.

With Best Wishes,
*Knud and Karen Marie Ross Hansen*

# நன்றி மறவா நெஞ்சுடனே...

இசையும் கூத்தும் இரண்டாகக் கலந்ததே தமிழரின் வாழ்வு இந்த இருபதாம் நூற்றாண்டில் இசையும் கூத்தும் பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் போதும் நமது பண்பாட்டையும் நாகரிகத்தையும் அகிலமெங்கும் அறியவைப்பதும் பரதக்கலையே.

கண்களுக்கு விருந்தாவது மட்டுமின்றி காலத்திற்கேற்ப சிறந்த கருத்துக்களை தாள லயத்துடன் வெளிப்படுத்துவதும் பரதக்கலையே. இக்கலையில் ஏற்பட்ட தீராத காதலால் எமது அன்புச்செல்விகள் சகானாவும் சப்னாவும் விடாமுயற்சியும் அயராத உழைப்பும் கொண்டு சிறுவயதில் இருந்து பரதக்கலையை கற்று வருகின்றனர்.

மாதா பிதா குரு தெய்வம் என்பது முதுமொழி

அன்னையும் பிதாவும் கண்கண்ட தெய்வங்கள் என்ற போதிலும் அறிவெனும் விளக்கேற்றி தன் மாணவரின் கைபிடித்து அடையவேண்டிய இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும் ஆற்றல் கொண்டவர் ஆசிரியரே. அவ்வகையில் எமது அன்புச் செல்விகளுக்கு கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதமே எமது மதிப்பிற்குரிய ஆசிரியை ஸ்ரீமதி யாழினி பா. பாலேந்திரன் அவர்கள் இவர் தனது மாணவர்களிடத்தில் மிக்க கனிவும் கண்டிப்பும் கொண்ட ஒரு சிறந்த மதிப்பிற்குரிய ஆசிரியை.

அதுமட்டுமின்றி அவரின் தொடர்ச்சியான சிறந்த வழிகாட்டலே எமது அன்புச் செல்வங்களின் இந்த அரங்கேற்ற நிகழ்வு

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்பது வள்ளுவர் வாக்கு ஸ்ரீமதி யாழினி பா பாலேந்திரன் நினைத்த காரியத்தை சாதிக்கும் மனத்திண்மை வாய்ந்தவர்.

ஆசிரியரின் தலைசிறந்த வழிகாட்டலில் அனைத்துலகரீதியாக நடைபெறும் நுண்கலைப்பரீட்சையில் ஒவ்வொரு தடவையும் திறமையான பெறுபேறுகளையே எமது புதல்வியர் அடைத்திருக்கின்றனர்.

பெற்றோருக்குப் பிள்ளைகளாகவும் தம்மைப் பயிற்றுவித்த குருவிற்குச் சிறந்த மாணவியராகவும் பெருமை சேர்த்துத்தரும் இவ்வினிய அரங்கேற்ற நிகழ்வு எங்கள் குடும்பத்திற்கு என்றுமே மறக்க முடியாத ஒரு நன்னாளாகும்.

இத்தகையதொரு அரிய வாய்ப்பை எமக்கு வழங்ய எமது ஆசிரியை ஸ்ரீமதி யாழினி பா. பாலேந்திரன் அவர்களுக்கும் எமது அழைப்பையேற்று வந்திருக்கும் பிரதம, சிறப்பு விருந்தினருக்கும், வாய்ப்பாட்டு ஆசிரியையிற்கும், வாத்திய இசைக்கலைஞர்களுக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும், நிகழ்ச்சி தொகுப்பாளர்களுக்கும், ஒப்பனையாளர்களுக்கும், இவ்வரங்கில் அமர்ந்திருக்கும் சபையோர்க்கும் எம் இதயம் கனிந்த நன்றிகள்.

**திரு. திருமதி சிவகுமார்**
(பெற்றோர்)



Thank You

www.menakacard.com